## பொருளாதாரத்தில் பெண்கள் முன்னேறுவது

# நாட்டிற்கு மிகப் பெரிய பலனைத் தரும்!

## விருதுநகரில் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**விருதுநகர்,அக்.28-**

**"பொருளாதாரத்தில் பெண்கள் முன்னேறுவது நாட்டிற்கு மிகப் பெரிய பலனைத் தரும்" என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.**

**விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட பற்றட்டைகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1051 குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பற்றட்டைகள் மற்றும் 617 பயனாளிகளுக்கு ரூ.91.26 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 1668 பயனாளிகளுக்கு ரூ.92.52 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

இந்திய ஒன்றியத்தில் எந்த மாநிலமும் செயல்படுத்திடாத வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் மகத்தான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

### யாரும் விடுபட்டு விடக்கூடாது!

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த 1051 மகளிருக்கு பற்று அட்டைகள் இன்று வழங்கப்பட்டுள்ளன். 1 கோடியே 6 லட்சத்து 58 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய திட்டம் செயல்படுத்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்த திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி தான் உரிமைத் தொகை வழங்குவதற்கான தேதி என்றாலும், ஒரு நாள் முன்னதாக 14 ஆம் தேதியே அரசால் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு வழங்கப்பட்டுள்ள பற்று அட்டைகள் பணம் எடுப்பதற்கான கார்டுகள் மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கையை மாற்றப் போகிற துருப்புச்சீட்டு. இவ்வளவு நாட்களாக இல்லத்தரசியாக வீட்டை பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி வந்த நீங்கள், இனி கலைஞர் உரிமைத்திட்டத்தின் பயனாளி என்று கம்பீரமாக சொல்லுகிற நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை பின்பற்றி, மற்ற மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நேற்று முன்தினம் (26.10.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நடைபெற்ற பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பாளிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாணிமைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

எந்த ஒரு அரசு திட்டத்தை செயல்படுத்தப்படுகிற போதும், மேல்முறையீடு செய்கிற வசதி இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை பொறுத்தவரை, விண்ணப்பம் ஏற்கபடாதவர்கள், மீண்டும் மேல்முறையீடு செய்கிற வசதியைச் செய்துள்ளோம். தகுதியுள்ள ஒரு மகளிர் கூட இந்த திட்டத்தில் இருந்து விடுபட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறோம்.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் நம்முடைய தமிழக அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அதை செய்தார்கள். கலைஞர் அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றம் கலாச்சாரம், சட்டம், பொருளாதாரம் ஆகிய மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்றும் தந்தை பெரியார் அவர்கள் கூறினார்.

பணக்காரன் ஏழை அடிமைத்தனத்தை விட, மேல்ஜாதி கீழ்ஜாதி அடிமைத்தனத்தை விட, முதலாளி தொழிலாளி அடிமைத்தனத்தை விட மோசமானது இந்த ஆண் பெண் அடிமைத்தனம் என்று சொன்னார். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது. பெண்களுக்கு படிப்புத் தேவையில்லை. குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும் தான் பெண்களுக்கு வேலை. இப்படி தான் நம்முடைய சமுதாயம் ஒரு காலத்தில் இருந்தது. இந்த பெண்கள் முன்னேற்றத்துக்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகளை எதிர்த்து பெண்ணுரிமைக்காக, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களாக உள்ளன.

### பெண்களுக்கு முக்கியத்துவம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தான், பெண்களுக்கு தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்கள். இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமை கிடைத்திருக்கிறது. ஒரு பெண் சிறுமியாக இருக்கும்போது, பணத்திற்காக தனது அப்பாவையும், வளர்ந்து திருமணம் ஆனதும் கணவனையும், வயது முதிர்ந்த காலத்தில் தனது மகனை எதிர்பார்த்திருக்க வேண்டும் என்ற நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையில் அமர வேண்டும்.

எனவே தான், அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்குகிறது. படிப்பதற்காக அல்லது வேலைக்காக பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுமார் 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிகமுக்கியமானது. சுமார் 17 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பெண்களுடைய சிரமத்தை குறைக்கக் கூடிய திட்டம் அது. காலையிலே எழுந்து வேலைக்கு செல்லக் கூடிய பெண்கள், தங்கள் குழந்தைகளுக்கு காலை உணவு செய்து தருவதில் உள்ள சிரமத்தை இந்த திட்டம் போக்கியிருக்கிறது.

இதுவரை அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையானது என்று சொல்லக் கூடிய திட்டம் தான் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம். இந்த திட்டம் மகளிருக்கான உதவித்தொகை அல்ல, உரிமைத்தொகையாகும். இதன் மூலம் பெண்களுடைய உழைப்புக்கு ஓர் அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். உங்களுடைய மகனாக சகோதரனாக இருந்து இதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெண்கள் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல் பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போது தான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும்.

பெண்கள் தங்கள் கைப்பேசியில் வருகிற செய்திகள் உண்மையா பொய்யா என்று நீங்கள் ஆராய்ந்து அதனை மற்றவர்களுக்கு பகிர வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மேயர், நகராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ஒன்றியக்குழு தலைவர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் 50 சதவீதம் பேர் பெண்களாக உள்ளனர்.

பெண்கள் நீங்கள் அனைவரும் முற்போக்காகவும் பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே, மகளிர் நிறைய படிக்க வேண்டும், முற்போக்காக சிந்திக்க வேண்டும். அப்போது தான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் முன்னேற முடியும். ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள். பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையப் போகிறது.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சிகளில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ., சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அரசு செயலர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் நேற்று (26.10.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாணடியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பற்றட்டைகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் 1051 குடும்பத்தலைவிகளுக்கு ரூ.1.26 கோடி மதிப்பிலான கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பற்றட்டைகளை வழங்கினர்.




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், மாவட்ட நூலக அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் (26.10.2023) நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ரூ.50 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட போட்டித்தேர்வு பயில்வோர் பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அரசு செயலாளர் மரு.தாரேஸ் அகமது, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசபெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதிமற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திறந்து வைத்தனர்.



விருதுநகர் மாவட்ட விளையாட்டரங்க மைதானத்தில் நேற்று முன்தினம் (26.10.2023) உடற்பயிற்சி கூடம், உள்விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது முன்னிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நேற்று முன்தினம் (26.10.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நடைபெற்ற பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தந்த போது, விருதுநகர் மாவட்டத்தின் சிறப்பம்சங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பார்வையிட்டனர்.